மின்னிதழ்
# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com
மலர்: 02 | குரல்: 150 | வள்ளுவர் ஆண்டு 2054 | செவ்வாய்க்கிழமை 13.02.2024 | பக்கங்கள் 11

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com



## தற்போதைய ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும்!

### சுரேஷ்பிரேமச்சந்திரன் வலியுறுத்து!

## தமிழரசுக் கட்சிக்குள் இரகசிய கலந்துரையாடல்!

### பங்கு போடப்பட்டது செயலாளர் பதவி!



## கச்சதீவு அந்தோனியார் ஆலய பக்தர்களுக்கான அறிவிப்பு!



## திருகோணமலை மனிதப் படுகொலையின் 28 ஆண்டுகள் நிறைவு!






## அபிவிருத்தி என்ற கவசத்துள் இனத்தின் தனித்துவத்தை சிதைக்க சிலர் முயற்சி!

### வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!

## மகிந்தவை விலைக்கு வாங்கியதை போல எங்களை வாங்க முடியாது:

### அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு!



ROLEX HOTEL
360, Galle Road, Wellawatte,Colombo06.
Tel: 011 2360462
ROLEX HOTEL
340, Hospital Road, Jaffna.
Tel: 021 2222808
E-mail: rolex.hotel@yahoo.com



# தற்போதைய ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும்:

## சுரேஷ்பிரேமச்சந்திரன் வலியுறுத்து!

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர் மக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டவரல்ல எனவும் தற்போதைய ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படவேண்டும் என காலத்துக்கு காலம் கூறப்பட்டு வருகிறது.

இந்த ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு பொருத்தமற்றது எனவும் பழைய நாடாளுமன்ற முறைமை கொண்டுவரப்படவேண்டும் எனவும் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.



# தேர்தலுக்கு தேவையான பணம்! ஆணைக்குழு வெளியிட்ட தகவல்!

அதிபர் மற்றும் பொதுத் தேர்தலுக்கு மொத்தமாக 20 பில்லியன் ரூபா தேவைப்படுவதாக பொதுத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே நாடாளுமன்றத்திற்கும் நிதியமைச்சிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக ரத்நாயக்க இதன்போது தெரிவித்தார். தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் எதிர்வரும் 2025 இல் முடிவடையும் அதே வேளையில் அதிபர் தேர்தல் இந்த வருடம் (2024) நடைபெறவுள்ளது.

இருப்பினும், அரசியலமைப்பின் 21வது திருத்தத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் நான்கரை வருடங்கள் நிறைவடைந்த பின்னர் எப்போது வேண்டுமானாலும் அதிபருக்கு நாடாளுமன்றத்தை கலைக்க அதிகாரம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.இதற்கிடையில் அதிபர் தேர்தலை நடத்தாமலே நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபர் முறைமையை ஒழிக்கும் மோசமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகிறது.

இவ்வாறான சூழலில், இந்த ஆண்டு (2024) அதிபர் தேர்தல் நடத்தப்படும் என அரசாங்கம் உறுதியளித்து அதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






விளம்பர
தொடர்புகளுக்கு
+94 777 163990

# அபிவிருத்தி என்ற கவசத்துள் இனத்தின் தனித்துவத்தை சிதைக்க சிலர் முயற்சி!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!



யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தில் முதலீடு செய்யும் நோக்கில் கால் பதித்துள்ள ஒரு சில புலம்பெயர்ந்த முதலீட்டாளர்கள் தமிழர்களின் தனித்துவமான பண்பாடு கலை கலாசாரங்களை சிதைக்கும் நோக்கிலும் இவற்றை பாதுகாக்க வேண்டிய இளைய தலைமுறையை திசை திருப்பும் வகையிலும் செயற்பட ஆரம்பித்துள்ளமை ஆரோக்கியமானதாக இல்லை.

யுத்தம் கோரமாக நடந்த இடங்களில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கொன்றெழிக்கப்பட்ட மண்ணில் பொழுது போக்கு மையங்கள் என்ற போர்வையில் அந்நிய கலாசார அடையாளங்களையும் அதன் நடைமுறைகளையும் உட் புகுத்தி பல சமூகப் பிறழ்வுகளை ஊக்குவிக்கும் செயற்பாடு மிக வேதனையாக உள்ளது.

அடுத்து கல்வியில் ஏதோ மிக பின் தங்கிய இனமாக ஈழத் தமிழர்களை காட்டும் வகையில் இனி தாங்கள் தான் பல்கலைக் கழகங்களை நிறுவி கல்வியை ஊக்குவிப்பதாக கதை அளந்து கொண்டு பாரம்பரிய கலைகள் மற்றும் பண்பாட்டை சீரழிக்கும் வகையில் இனத்தை ஏமாற்றி பணம் சம்பாதிக்கும் செயற்பாடு மிக கவலை அழிக்கிறது.

ஈழத் தமிழர்கள் மத்தியில் சரியான ஒரு மேய்ப்பன் இல்லை என்பதை காட்டும் சம நேரம் ஈழத் தமிழர்களை வைத்து எந்தப் பிழைப்பையும் நடத்தலாம் என்ற எண்ணமும் மேலோங்கி வருவதை காண முடிகிறது.

சிங்கள ஆட்சியாளரும் சில வெளிச் சக்திகளும் விரும்பும் நிகழ்ச்சி நிரலில் புலம்பெயர் முதலீட்டாளர் என்ற வடிவத்தில் சிலர் கைக் கூலிகளாக மாறியுள்ளனர் இனத்தின் ஒற்றுமை மற்றும் தனித்துவ அடையாளங்கள் போன்றவற்றை மாற்றியமைக்கும் அல்லது கொச்சைப்படுத்தும் நோக்கில் தங்களது செயற்பாடுகளை முன்நகர்த்தி வருகின்றனர் தாயகத்தில் உள்ள சக்திகளை விமர்சித்து தங்களை புனிதர்கள் போல புதிய தலைமுறைக்கு காட்ட முயல்கின்றனர் ஒரு சில முதலீட்டாளர்கள் ஆனால் எமது வலிகள் வேதனைகள் துயரங்கள் எவற்றிலும் பங்கெடுக்காத இவற்றை எல்லாம் மூலதனமாக வைத்து பணம் சம்பாதித்த குழு மீண்டும் பிறிதொரு வடிவில் மீண்டும் பணம் சம்பாதிக்க களம் இறங்கியுள்ளது.

இப்படியான இனப்பற்று இல்லாத வியாபாரிகள் மிக ஆபத்தானவர்கள் என்பதற்கு அப்பால் இனத்தை எதிரியானவன் அழிப்பதற்கு மிகப் பலமாக எதிரிக்கு கைகொடுப்பார்கள் கல்வியில் தமிழர்கள் அனைத்து துறைகளிலும் பிரகாசித்த காரணத்தால் தான் பல்கலைக்கழக தரப்படுத்தல் சிங்களவர்களால் கொண்டு வரப்பட்டது என்ற அடிப்படை வரலாற்றுப் பிரச்சினைகள் தெரியாத விபச்சார வியாபாரிகள் தான் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களை கல்வியில் உயர்த்தப் போகிறார்களாம் இது மிக வேடிக்கையான கதை. மிகக் கொடிய யுத்தத்திலும் தமிழர்கள் பலமாக வைத்திருந்த துறை கல்வித்துறை தான் இத்தகைய வரலாறுகள் தெரியாது வெளிச் சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் தமிழர்களை மீண்டும் குழப்பி தங்களுடைய தேவைகளை குளிர்காய சிந்திக்கும் தரப்புடன் எதிர்வரும் காலத்தில் பயணிப்பதை புலம் பெயர் முதலீட்டாளர்கள் தவிர்க்க வேண்டும் அத்து டன் தமிழர்களின் தனித்துவத்தை சிதைக்கும் முத லீகள் வருவதை தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆகவே தமிழர்களின் இருப்பை பாதுகாக்கும் வகையில் சமூக வளர்ச்சிக்குரிய முதலீகளை தமிழர்கள் இரு கரம் கூப்பி வரவேற்கின்றனர் அத்துடன் சிங்கள மற்றும் வெளிச் சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் வரும் புலம்பெயர் முதலீடுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள்.





விளம்பர தொடர்புகளுக்கு +94 777 163990

# தமிழரசுக் கட்சிக்குள் இரகசிய கலந்துரையாடல்!

## பங்கு போடப்பட்டது செயலாளர் பதவி!



தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியின் இறுதி தீர்மானம் குறித்து வவுனியாவில் இடம்பெற்ற இரகசிய கலந்துரையாடல் சரியான தீர்வின்றி நிறைவடைந்ததாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி சர்ச்சைக்கு தீர்வு காணும் முகமாக தற்போதைய பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் தலைமையில் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் செயலாளர் பதவிக்கு போட்டியிட்ட இரு அணிகளையும் சேர்ந்த ச.குகதாசன், ஞா.சிறிநேசன், கோடீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, திருகோணமலையைச் சேர்ந்த குகதாசனும், மட்டக்களப்பைச் சேர்ந்த சிறிநேசனும் பொதுச் செயலாளர் பதவியை ஒவ்வொரு வருடமாக பகிர்ந்து கொள்வது தொடர்பில் பேசப்பட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

எனினும், முதலில் யார் ஒரு வருடம் பதவி வகிப்பது என்பது தொடர்பில் இருவருக்கும் இடையில் இணக்கப்பாடு இன்றி முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில் முடிவுகள் எட்டப்படாத நிலை ஏற்பட்டது.

இருவரும் தாம் பொதுச் செயலாளராக வருவதற்குரிய காரணங்களை நியாப்படுத்தியிருந்தனர். எனினும், இருவரும் பேசி இரண்டு நாட்களுக்குள் முடிவு தருமாறு கூறி நடைபெற்ற இரகசிய கலந்துரையாடல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.



# இலங்கையில் அமைக்கப்படவுள்ள ஐஐடி தொழில்நுட்பக் கழகம்!

ஐஐடி என்ற பிரபல இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் மூன்றாவது கடல்சார் வளாகம் இலங்கையில் அமைக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

இலங்கையில் ஐஐடி அமைப்பதற்கான முன்மொழிவு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் கடந்த நவம்பரில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

ஆதாரங்களின்படி, இந்த திட்டத்திற்காக இலங்கை அரசாங்கம் ஐஐடி மெட்ராஸ் உடன் தொடர்பில் உள்ளது.

இதன்படி எதிர்கால திட்டம் பற்றி விவாதிக்க உயர்மட்டக் குழு சமீபத்தில் சென்னை வளாகத்திற்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இதன்படி, வளாகம் கண்டியில் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வளாகத்திற்கான திட்டம் நிறைவேறினால், அது, ஐஐடி மெட்ராஸின் இரண்டாவது சர்வதேச வளாகமாக இருக்கும். இந்தநிலையிலேயே ஐஐடியின் மூன்றாவது வளாகம் இலங்கையில் அமைக்கப்படும் வாய்ப்பு குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.



# இணைய பாதுகாப்புச் சட்டம்: மனித உரிமைகள் ஆணைக்குழு அதிருப்தி!



இலங்கை நாடாளுமன்றம், உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை புறந்தள்ளி, இணையதள நடவடிக்கைகளை கண்காணிக்கும் சட்டத்தினை நிறைவேற்றியுள்ளமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

மிகவும் சர்ச்சைக்குரிய நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமானது, இந்தாண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி தனிப்பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இணையதள பாதுகாப்புச் சட்டத்தை கவனமாக ஆராய்ந்த பின்னர், அதிலுள்ள பல பிரிவுகள் உயர் நீதிமன்ற தீர்ப்பிற்கு அமைவாக இல்லை எனவும் அதில் பல அம்சங்கள் விடுபட்டுள்ளன எனவும் அவதானிக்க முடிவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது.
இருப்பினும், கடந்த மூன்று நாட்களுக்கு முன் உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமையவே இந்த இணையதள பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என நாடாளுமன்றத்தின் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்திருந்தார்.
மேலும், இந்த சட்டமூலத்திற்கு எதிராக 51 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி தீர்ப்பை அறிவித்தது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஊடக நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ செயற்பாட்டுக் குழுக்கள் உட்பட பலர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வகையில், "மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மாத்திரமே இந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்ற முடியும். அது மாத்திரமின்றி அந்த சட்டத்தில் திருத்தங்கள் தேவைப்பட்டால் அதை தனிப்பெரும்பான்மை ஆதரவுடன் நிறை வேற்ற முடியும்." எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த மனுக்கள் மீதான விசாரணையின் போது, மசோதாவின் 56 பிரிவுகளில் 31ஆனவை திருத்தப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் கண்டறிந்து பரிந்துரைகள் விடுத்திருந்தது. எனினும், அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என ஆணைக் குழு கூறியுள்ளது.
இதனை தொடர்ந்து, சபா நாயக்கருக்கு எழுதிய கடிதத்தில், இணையதள பாதுகாப்புச் சட்டத்திலுள்ள தொழில்நுட்ப ரீதியிலான தவறுகளை ஆணைக் குழு விபரித்து, மசோதாவில் இருந்த 30 பிரிவுகள் அரசியல் சாசனத்தின் பிரிவுக்கு 12 (1) இசைவாக இல்லை, மேலும் சில அம்சங்கள் பிரிவு 14 (1) (அ) ஆகிய பிரிவுகளுக்கு எதிராக உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளது.
இருப்பினும், திருத்தங்கள் செய்யப்படாத நிலையில், உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு ஏற்ற வகையில் அந்த சட்டம் இயற்றப்படாமை குறித்து ஆணைக் குழு கரிசனை வெளியிட்டுள்ளது.
அதேநேரம், சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை இது குறித்து தெரிவிக்கையில், இலங்கையில் "கருத்துச் சுதந்திரத்தை நசுக்கவும், எதிர்ப்புக்களை ஒடுக்கவும் அரசின் ஆயுதங்களில் புதிதாக சேர்ந்துள்ள ஒரு விடயம் இது" என விமர்சித்துள்ளது.
அதேபோன்று அப்பிள், அமெசான், கூகுள் மற்றும் யாஹூ போன்ற அமைப்புக்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள ஆசிய இணையத்தள கூட்டமைப்பும் இந்த சட்டத்தில் பரந்துபட்ட திருத்தங்கள் தேவை எனவும், இந்த சட்டமானது நாட்டிற்கு வரக்கூடிய முதலீடுகளை பாதிக்கும் எனவும் எச்சரித்துள்ளது.

மேலும், "உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை முழுமையாக ஏற்று அதை செயல்படுத்த தவறியமை, அந்த சட்டத்தின் தற்போதைய வடிவம் குறித்தும், நாடாளுமன்றத்தில் தேவையான அளவிற்கு வாக்குகளை பெறாமை குறித்தும் ஆழ்ந்த கவலை எழுகிறது" என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதியரசர் எல்.டி.பி. தெஹிதெனியவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# திருகோணமலை மனிதப் படுகொலையின் 28 ஆண்டுகள் நிறைவு.




திருகோணமலை - மூதூர், குமாரபுரம் பகுதியில் மனிதப் படுகொலைகள் இடம்பெற்று 28 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

இந்த நினைவு தினத்தை முன்னிட்டு பொதுமக்க ளால் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குமார புரம் கிராமத்தில் அத்துமீறி நுழைந்த ஆயததாரி களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் வெட்டுச் சம்பவத்தின் காரணமாக பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்ததுடன் 15வயதான சிறுமி ஒருவர் தவறான நடத்தைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

குறித்த கொடூர சம்பவம் 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி மாலை இடம்பெற்றிருந்தது.

எனினும், கொலைச் சம்பவம் தொடர்பாக 1996ம் ஆண்டு மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நடை பெற்ற வழக்கு விசாரணையில் தெகிவத்தை இராணுவ முகாமில் சேவையில் இருந்த 8 இரா ணுவ வீரர்கள் சாட்சியாளர்களினால் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக குற்றவியல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர் குறித்த வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டு நடைபெற்று வந்தநிலையில், அன்றைய யுத்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிரிகளின் வேண்டுகோளுக்கு அமைய சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரில் பாதுகாப்பு கருதி குறித்த வழக்கு அனுரா தபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை ஜ/ரிகள் சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்ததோடு 20 ஆண்டுகளுக்குப் பின்னர் 2016ம் ஆண்டு யூலை மாதம் 27 ஆம் திகதி எஞ்சியிருந்த 6 முன்னாள் இராணுவ வீரர்களும் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டதுடன், அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டனர்.

குறித்த படுகொலைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தமது உறவுகளுக்கு 28 ஆண்டுகளுக்கு பின்னரும் நீதி கிடைக்காமல் நீதி கோரி வரும் நிலையில் நேற்று படுகொலையின் 28 ஆவது நினைவேந்தல் நிகழ்வை பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து முன்னெடுத் துள்ளனர்.

மேலும், பாதிப்பில் இருந்து மீளாத மக்கள் பொருளாதார ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# கச்சதீவு அந்தோனியார் ஆலய பக்தர்களுக்கான அறிவிப்பு!



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா வானது இந்த வருடம் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் இடம்பெற வுள்ளது.

யாழ். ஆயர் இல்லம், இலங்கை கடற்படை, நெடுந் தீவு பிரதேச செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினது முழுமையான ஒத்துழைப் புடன் பெப்ரவரி 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், மேற்படி விடயம் தொர்பாக யாழ்ப் பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந் தரனால் முக்கிய விடயங்கள் அடங்கிய அறிக்கை யொன்று வெளியிப்பட்டுள்ளது.
குறித்த அறிக்கையில், பெப்ரவரி 23 ஆம் திகதி காலை 5 மணி தொடக்கம் மு.ப 10 மணி வரை அரச பேரூந்துகள் மற்றும் தனியார் பேரூந்துகள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து குறிக்கட்டு வான் வரை சேவையில் ஈடுபடும்.

எனினும், கச்சதீவுக்கான படகுச் சேவையானது குறிக்கட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்கு துறைகளில் இருந்து பெப்ரவரி 23 ஆம் திகதி காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிக்கட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகிற்குரிய ஒரு வழிப் பயணக் கட்ட ணம் ரூபா 1500 அறவிடப்படவுள்ளது. இந்நிலை யில், கச்சதீவு திருவிழாவில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் தங்களுக்கு தேவையான உணவு மற்றும் குடிநீர் ஏற்பாடுகளுடன் வருகை தருதல் வேண்டும்.

மேலும், கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமா னது யாத்திரிகர்களின் புனித தலமாகவுள்ளதால் மது பாவனைப் பொருட்கள் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாக தடை செய்யப்பட் டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழில் வெகுவிமர்சையாக இடம்பெற்ற கரைவலை மீன்பிடித் தினக் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம் நாகர்கோயில் கடற்கரையில் நேற்றைய தினம் மீனவர்களால் கரைவலை மீன் பிடித் தினக் கொண்டாட்டம் சிறப்பாக இடம்பெற்றது.

மீனவ சமூகத்தினர் 09 நாட்களாக நாகர்கோவில் நாக தம்பிரானுக்கு விரதம் இருந்து சமய ரீதியான நிகழ்வினை நிறைவு செய்த பின்னர் குறித்த தினத்தினை கொண்டாடி மகிழ்ந்துள்ளமை குறிப்பிடத்தகக்து.



விளம்பர தொடர்புகளுக்கு +94 777 163990

# மகிந்தவை விலைக்கு வாங்கியதை போல எங்களை வாங்க முடியாது:

## அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு!



மகிந்த ராஜபக்சவை விலைக்கு வாங்கியதை போன்று உலக நாடுகளால் எங்களை விலைக்கு வாங்க முடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடு என்ற ரீதியில் தனித்துச் செயற்பட முடியாது, சகல தரப்பினரின் ஒத்துழைப்புடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நாட்டுக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலான வெளிவிவகார கொள் கையில் இருந்து கொண்டு நாங்கள் செயற்படுவோம்.

இந்திய அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வ அழைப் புக்கு அமைய இந்தியாவுக்கு விஜயம் மேற் கொண்டிருந்தேன். இந்திய விஜயம் குறித்து சஜித் பிரேமதாச, மகிந்த ராஜபக்ச, ரணில் விக்ரசிங்க ஆகியோரின் தரப்பினர் கலக்கமடைந்து பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்கள். அந்த குற்றச்சாட்டுக்களைக் கண்டு நாங்கள் கலக்கம டையவில்லை.

தற்போது எதிரணி எமக்கும், அவர்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ அறிவிப்பு வெளியானதும் ஒன்றிணைவார்கள்.

ரணிலுக்கும், சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடுகள் காணப்படுவதால் அவர்கள் ஒன்றிணைவது நிச்சயமற்றதாக உள்ளது. ஒருவேளை ஒன்றிணையலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முட்டையின் விலை உயர்வு!

முட்டையொன்றின் விலையினை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் தலைவர் புத்திக வீரசேன தெரிவித்துள்ளார்.

அதன்படி, நேற்று (12) முதல் முட்டை விலையை உயர்த்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முட்டைக்கான விநியோகச் செலவுகள் அதிகரித் துள்ளதாலும், அதனுடன் தொடர்புடைய ஏனைய வர்த்தகத்தைப் பாதிக்கும் பல செலவுகளாலும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

அதன்படி நேற்று (12) முதல் முட்டை ஒன்றின் மொத்த விலை 58 ரூபாவாகவும் சில்லறை விலை 63 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சந்தையில் மீண்டும் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது, சதொச வர்த்தக நிலையங்களிலும் சில்லறை விற்பனை நிலையங்களிலும் முட்டைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்ததாகவும் இதன்போது கூறப்பட்டிருந்தது.

இதன் காரணமாக முட்டையின் விலை மீண்டும் அதிகரிக்கப்படலாம் என எதிர்வுகூறப்பட்டிருந்த நிலையில் நேற்று (12) முதல் முட்டையின் விலை யில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இவற்றுக்கிடையே, நாட்டில் இறக்குமதி செய்யப் பட்டுள்ள 7 மில்லியன் முட்டைகள் அடுத்த வாரம் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுதாபனத் தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# இலங்கைக்கு சீன நிறுவனத்திடமிருந்து எரிபொருள் கொள்வனவு!




சீன நிறுவனத்திற்கும் இலங்கையின் முதலீட்டுச் சபைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன் படிக்கையின் கீழ் ஹம்பாந்தோட்டையில் அமைக் கப்படவுள்ள உத்தேச சீன எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து இலங்கைக்கு எரிபொருளை கொள்வனவு செய்ய முடியும்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் உற்பத்தியில் 20 சதவீ தத்தை கொள்வனவு செய்ய இலங்கைக்கு உரிமை உண்டு.

சீன பெட்ரோலியம் மற்றும் கெமிக்கல் கோர்ப்ப ரேஷன் அல்லது சினோபெக் நிறுவனம் இலங்கை யின் எரிபொருள் சந்தையில் பிரவேசித்தமையை அடுத்து, சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும் திட்டத்தை அறிவித்தது.
இதன்படி உத்தேச ஹம்பாந்தோட்டை சுத்திகரிப்பு நிலையத்தில், நாளாந்தம் 100,000 பீப்பாய் கச்சா எண்ணெய் சுத்திகரிக்கப்படலாம் என்றும், அதன் கொள்ளளவு படிப்படியாக அதிகரிக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
சுத்திகரிப்பு நிலையத்தின் முதல் கட்டத்தின் போது சினோபெக் நிறுவனம் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டைக் கொண்டுவரும், இது நான்கு ஆண்டுகளில் முழுமையாக அமைக்கப்படும்.

இந்த ஆண்டுகளில் அரசாங்கம் குறைந்தபட்சம் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு எதிர்பார்க் கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர்கள் தொடர்பில் வைத்திய நிபுணர் விடுத்துள்ள எச்சரிக்கை!



சிறுவர்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு தடவைக ளாவது குளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித் துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகை யில், நாட்டில் தற்போது நிலவும் மிகவும் வரண்ட கால நிலை காரணமாக தோல் நோய்கள் அதிக ரித்து வருகிறது. இந்நிலைமையானது சிறுவர்க ளுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா கவும் அவர் எச்சரித் துள்ளார். மேலும், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ள சிறுவர்களுக்கு கூட இந்நாட்களில் குளிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். ஒருவருக்கு தோல் நோய்கள் இருப்பின் காலையி லும் இரவிலும் சுமார் 20 நிமிடங்களேனும் நீரில் இருப்பதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்த முடியும் எனவும் வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.


# உடனடி வேலைவாய்ப்பு

வடக்கு மாகாணம் முழுவதும்
தேசியம் வாராந்த பத்திரிகையை
விநியோகம் செய்வதற்கு ஆண்/ பெண்
இருபாலரும் தேவை

தொடர்புகளுக்கு:
077 716 3990-076 567 3339

# காணி விற்பனைக்கு

## புத்தூர் மட்டுவில்

### பிரதான வீதியில்.

2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.

2 பரப்பு - 5,50,000/=

20 அடி பாதையுடன்.

- யாழ் மத்திய பொருளாதார சந்தைக்கு அருகாமையில் காணி அமைந்துள்ளது.
- ஆலையங்கள் மற்றும் வைத்தியசாலை, பாடசாலைகளும் அருகாமையில் உள்ளது.

- நன்னீர் நிலம்,
- மேட்டு நிலம்,
- மின்சார வசதியும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு :

**076 10 98 504, 074 26 00 617**

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.

# கிருபா லேணர்ஸ்




කිරුබා ලේර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




| தலைமையகம் | | | | |
|---|---|---|---|---|
| 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| 021 222 4353 | ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| 0777 22 5292 | முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:

CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME